## வெளிவந்துவிட்டது

**G.C.E. A|L 1978 AP. பரீட்சைக்குரிய**

## வினு - விடை

பொருளாதாரம் T லோகநாதன் B. A.
இந்து நாகரிகம் N. S. ஐயர் M. A.
(A/L, G A Q வகுப்புகளுக்குரியது)

கிடைக்குமிடங்கள்:
லோகநாதன் இன்ஸ்ரிரியூட், 166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கல்வி போதனுநிலையம், 34, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
சிறிலங்கா புத்தகசாலை 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
பூபாலசிங்கம் புத்தகசாலை 4, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

## யாழ் பீடிபுகையிலை கொள்முதல்

வடமாகாணத்தில் 1977-ம் ஆண்டு உற்பத்தி செய்த பீடிப் புகையிலை கொள்வனவு செய்வதற்கு ஸ்ரீலங்கா புகையிலைக் கைத்தொழில் கூட்டுத்தாபனம் எம்மை தங்களின் விநியோகப் பிரதிநிதியாக நியமித்துள்ளது.

எனவே 1977-ம் வருட பீடிப்புகையிலை கையிருப்பு உள்ள உற்பத்தியாளர் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

முக்கிய கவனிப்பு:
1978-ம் வருட யாழ் பீடிப்புகையிலை உற்பத்தியாளர்கள் உடனடியாக தமது உற்பத்தி விபரத்தை எமக்கு அறியத் தரவும்.

**வ. வ. இராமசாமிப்பிள்ளை அன் சன்ஸ்**
47, பீச் றோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 230

8737

மானிப்பாய் கோவில்பற்று
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## தேவை

### அச்சக வேலையாட்கள்

**பிளேட்டின்**

பிளேட்டின் மெசினில் எல்லா வேலை உட்பட எல்லா வேலைகளும் செய்யக்கூடியவராக இருக்கவேண்டும்.

**சிலிண்டர்**

பக்கங்கள் கட்டுவதுடன் மற்றும் சிலிண்டர் சம்பந்தமான சகல வேலைகளும் தெரியவேண்டும்.

**பயின்டர் ரூலர்**

லெட்ஜர் பயின்டிங் லெதர் பயின்டிங் உட்பட எல்லா பயின்டிங் வேலைகளும் ரூலிங் மெசினில் தொடர்ச்சியாக ஐந்து வருடங்களுக்குக் குறைவில்லாத வேலை செய்த அனுபவமும்.

**கொம்போசிங்**

மூன்று மொழியிலும் வேலை செய்யக்கூடியவராகவும் செலிங் ஜொப் வேலையில் நல்ல திறமை உள்ளவராகவும் இருத்தல்வேண்டும்.

மேற்படி தனித்தனி வேலைகளுடன் அச்சகத்திலுள்ள இன்னும் குறைந்தது இரண்டு வேலைகளாவது தெரிந்திருக்கவேண்டும்.

வயது 25-க்கு மேல் 40-க்குள், 10 வருட அச்சக அனுபவம், கல்வித்தகைமை குறைந்தது 8-ம் வகுப்பு சித்தியடைந்திருக்கவேண்டும்.

சங்க எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அச்சக வேலையிலிருந்து விடுபட்டு தற்போது வேறு வேலைகள் செய்பவர்கள் எவ்வளவு காலம் என்பதைக் குறிப்பிடவும்.

அச்சடிப்புத் தொழில் சம்பள நிர்ணய சபையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

சங்கத்திலிருந்து ரூபா ஒன்று கட்டிப்பெறப்படும் படிவத்தில் விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும். முன்பு விண்ணப்பித்தவர்களும் மீண்டும் விண்ணப்பிக்கவேண்டும்.

கூட்டுறவு ஆணைக்குழு சுற்று நிருபத்தின்படி பிணை கட்டக்கூடியவராக இருத்தல்வேண்டும்.

23-3-78-ம் திகதிக்கு முன்பு விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டும்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்
ப. நோ. கூ. சங்கம், மானிப்பாய். 8732

## 'குண்டர்கள் என்னையும் மனைவி பிள்ளைகளையும் தேடினர்'

(யாழ்ப்பாணம்)

பொல்காவலையைச் சேர்ந்த தோட்ட சுப்பிரண்டன் வி. விக்னராசா சன்சோனிகமிஷன் முன் கூறியதாவது:

தோட்டப்பகுதியில் இனக் கலவரம் ஆகஸ்ட் 17ம் தேதி காலை ஆரம்பமானது.

நான் 16ம் தேதி காலை 10 மணிக்கு பாணந்துறைக்கு ஒருவரைச் சந்திக்கச் சென்றேன். பின் கல்கிசைக்குச் சென்றேன். அங்கு நண்பர் வீட்டில் தங்கினேன்.

17ம் தேதி காலை கோட்டைக்கு 8 மணிக்கு வந்தேன். தலைமைக் கந்தோருக்குச் சென்று 5000 ரூபா எக்தொழிலாளருக்குக் கொடுக்கப் பெறச் சென்றேன். அன்று தமிழர் தாக்கப்படுவதாகவும், கலவரம் கூடுவதாகவும் அறிந்தேன். இதனால் நான் தலைமைக் கந்தோர் செல்லவில்லை. நான தோட்டத்திற்குப்புறப்பட்டேன். நான் கோட்டையில் போய் ரயில் ஏறி மீரிகாமத்திற்கு 12 மணிக்கு வந்தேன். ஞகம ரயில் நிலையத்தைத் தாண்டியதும் சில சிங்கள இளைஞர்கள் ஏறி தமிழரை தேடுவதைக் கண்டேன். மீரிகாமவில் இறங்கி மற்ற ரயிலில் ஏறி பொல்காவலை புறப்பட்டேன். 3 மணிக்கு பொல்காவலை சென்றேன். அங்கு தமிழர்கள் தாக்கப்படுவதைப் பார்த்தேன். அதனால் தோட்டம் போகுமுன் பொல்காவலை பொலிஸ் நிலையம் சென்றேன். அங்கு 30 அல்லது 40 தமிழர்களை சந்தித்தேன். தமிழ் பெண்களும் இருந்தனர். குழந்தைகளும் இருந்தனர். இவர்கள் உத்தரதேவி ரயிலில் செல்லும்போது 'பொலஹர' ரயில் நிலையத்தில் 17ம் தேதி தாக்கப்பட்டவர்களாவர்.

நான் பொலிஸ் நிலையத்தில் இருந்தபோது தோட்ட கங்காணி என்னைத் தேடிவந்தார். தோட்ட பங்களாவில் பிள்ளைகளுடன் இருந்த என் மனைவி இவரை அனுப்பியிருந்தார். பொலிஸ் நிலையத்தில் என் மனைவிக்கு ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினேன். பொலிசாருடன் தோட்டத்திற்கு வருவதாக அறிவித்தேன். பொலிஸ் இன்ஸ்பெக்டர் வந்து இங்கு நிலைமை மிகவும்மோசம் என்று கூறினர். என் மனைவியையும் பிள்ளைகளையும் கூட்டிவர ஜீப்பை தருவதாகவும் சொன்னார். 2 பொலிசாரையும் என்னுடன் பாதுகாப்புக்கு அனுப்பினர்.

நான் தோட்ட பங்களா சென்று அறைகளை எல்லாம் பூட்டிவிட்டு காவலாளியிடம் துவக்கை கொடுத்து மற்றும் 5 பேரை விட்டுவிட்டு பங்களாவைப் பார்த்துக்கொள்ளும்படி கூறிவிட்டுவந்தேன். நாங்கள் பொலிஸ் நிலையம் வந்தோம். அங்கு பொலிஸ் பாதுகாப்புடன் 12 நாள் தங்கினோம். நான் பொலிஸ் நிலையத்திலிருந்தபோது கோட்ட பங்களாவுக்கு தொலைபேசியில் அறிவித்தேன். நிலைமை சீராகும்வரை தோட்டத்தை பார்க்க யாரையும் அனுப்பும்படி கூறினேன். தோட்ட கம்பெனி அதிகாரி ஒருவர் ஒரு சிங்கள குடும்பத்தை தோட்டத்திற்கு அனுப்புமாறு கூறினார்.

குண்டர்கள் தமிழரை தாக்கிக்கொண்டிருப்பதால் இந்த நிலையில் அப்படிசெய்யமுடியாதெனக் கூறினேன்.

ஆகஸ்ட் 18ம் தேதி தோட்டத்திலுள்ள சிங்கள பெண் தொழிலாளி வந்து தோட்ட பங்களாவை குண்டர்கள் 5 மணிக்கு கொள்ளையடித்துவிட்டதாக கூறினர். குண்டர்கள் என்னையும் மனைவி பிள்ளைகளையும் தேடியதாகவும் சொன்னார். நாங்கள் பங்களாவில் இல்லை என அறிந்தனர். தன்னிடம் தண்ணீர் வாங்கிக்குடித்த பின் குண்டர்கள் திரும்பியதாக அப்பெண் கூறினர்.

18ம் தேதி இரவு பிரகாசா, காரில் பொலிஸ் நிலையம் வந்து என் பங்களா உடைத்து சேதப்படுத்தப்பட்டதாக கூறினார். நான் பொலிசாருடன் ஜீப்பில் சென்றேன். என் பெட்டி உடைத்து நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது. 11,500 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டது. 100 குண்டர்கள் வந்ததாக காவலாளி கூறினர்.

19ம் தேதி இரவு 1-30 மணிக்கு தோட்ட காவலாளி தாக்கப்பட்டு கிணற்றில் வீசப்பட்டார். அவரின் துவக்கை பறித்துக்கொண்டனர். இதனால் தோட்டத் தொழிலாளர் வெளியேறிவிட்டனர். இதனால் 20 நாட்கள் தோட்டம் கவனிப்பாரின்றிக் கிடந்தது.

[5-ம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவு பட்டினசபை மன்றம்

### 1978-ம் ஆண்டுக்கான 1-ம் சந்தாய சோலைவரி அறிவித்தல்

1978-ம் ஆண்டுக்கான முதலாம் சந்தாய சோலைவரியை 31-3-78-ம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கட்டி முடிக்கவேண்டும். 31-3-78ம் திகதியுடன் வரியைச் செலுத்தத் தவறின் 10% தண்டம் அறவிடப்படும். வரி சம்பந்தமாக அனுப்பப்படும் காசோலைகள், காசுக் கட்டளைகள் யாவும் விசேட ஆணையாளர், பட்டினசபை, முல்லைத்தீவு என்ற பெயருக்கு அனுப்பப்படவேண்டும்.

**திரு. க. சிவஞானம்,**
விசேட ஆணையாளர்,
பட்டினசபை,
முல்லைத்தீவு.

பட்டினசபை அலுவலகம்
10-3-78.

8733

## வரி விளம்பரம்

### தேவை

சோடா பெட்டி ஏற்றி இறக்கி வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். பிள்ளையார் ஸ்ரோர்ஸ் இல 31 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். 8710

கஸ்தூரியார் வீதியிலுள்ள கோட்டல் ஒன்றிற்கு இரண்டு காசாளர் தேவை. பிணைப் பணம் ரூபா 2000/- செலுத்த வேண்டும் 8 மணிநேர வேலை உணவு வசதிகளுடன் திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். விரும்பியோர் 20-3-78க்கு முன் விண்ணப்பிக்கவும். நியூ கொயின்ஸ் ஹோட்டல், 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 8741

## அடைவு நகை ஏல விற்பனவு

காரைநகர், சயம்பு வீதி திரு. அருணாசலம் தம்பையா அவர்களிடம் 1-1-1975ம் திகதிக்கு முன் அடைவுவைத்து மீட்கப்படாத நகைகள் 30-3-1978 வியாழக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

**வி. செ. குட்டிப்பிள்ளை**
ஏலவிற்பனவாளர்,

'இராசநிதி'
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 8694

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
வழக்கு இலக்கம் சடு/ 1463

பொன்னு நாகரத்தினம், கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை

வழக்காளி

எதிராக

1. மார்க்கண்டு அன்னலிங்கமும் பெண்
2. செல்லக்கிளியும், புதுத்தோட்டம், தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1978-ம் ஆண்டு சித்திரை மாதம் 25-ம் திகதி (25-4-78) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 876/-ம் மேலும் முதல் ரூபா 1000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைந்த திகதியாகிய 1976-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ந் திகதியிலிருந்து தீர்வைத்திகதியாகிய 1977-ம் ஆண்டு வைகாசி மாதம் 20-ந் திகதி வரையுமான வட்டியும், அதன் பின்னர் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியாகிய வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 497-42½ சதம். கொடுக்கவேண்டியிருப்பதாலும் இதில் செலவுப்பணம் ரூபா 200/-நீக்கி மிகுதி.

### குறித்த ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை 'பருத்தி ஒல்லை' நிலப்பரப்புமூன்று (3) கல்வீடும், கிணறும், வானபயிர், செய்பயிர்களும், எல்லை கிழக்கு தெரு, வடக்கு சின்னத்தம்பி செல்லத்துரையினதும் பொன்னன் சுப்பனினதும் ஆதனங்கள் மேற்கு வெள்ளையன் சுகிர்ணியதும் பெண் சீதேவியினதும் பொன்னன் நாகமுத்துவினதும் ஆதனங்கள், தெற்கு காணி மாரிமுத்துவினதும் கந்தன் செல்லையாவினதும் சின்னவன் பெண் நாகமுத்துவினதும் ஆதனங்கள் இதில் வடக்கிழக்கிலும் வடக்கிலும் சின்னத்தம்பி செல்லத்துரைக்கும் பொன்னன் சுப்பனுக்குமுரிய ஆதனங்களுக்குரிய கிணற்றுப் பங்கும் தூர்வை வழிவாய்க்காலும் புறநீங்கலாக அடங்கலும் பதிவு H 427/67

இவ்வாதனம் 4-6-69 ல் நொத்தாரிஸ் அ. குமாரகுருவால் 1651-ம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய ஈட்டுறுதியின்படி ரூபா 2000/-க்கு அதற்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டிக்கு 1-ம் ஈடாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது.

சி. ஆ. க. வடிவேலு ஜே. பி.
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்,
சிவிமைதிப்பாளர்.

'வடிவேல் உதயம்'
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்,
1-3-78.

8723

## பல்கலைக்கழக அனுமதி

பல்கலைக்கழக வளாகங்களுக்கு மாணவர்களைப் பிரதேச வாரியாகத் தெரிவு செய்வது என்று கல்வி அமைச்சர் தீர்மானித்திருப்பது வரவேற்கத்தக்கது.

கிழக்கு மாகாணத்திலும் தெற்கில் மாத்தறையிலும் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இப்பொழுது கொழும்பில் கொழும்புப் பல்கலைக்கழக வளாகமும், வித்தியாலங்கார வித்தியோதய வளாகங்களும் கட்டுப்பெத்தை வளாகமுமாக நான்கு வளாகங்கள் இருக்கின்றன.

பேராதனையிலுள்ள பல்கலைக்கழக வளாகமும் யாழ்ப்பாணத்திலுள்ள வளாகமும் அரத்தில் உயர் நிலையிலுள்ளன.

யாழ்ப்பாண வளாகத்துடன் வைத்தியப் பிரிவும் ஆரம்பிக்கப் படலாமென்று எதிர்பார்க்கப் படுகின்றது.

பேராதனை வளாகத்துக்கோ கொழும்பு வளாகத்துக்கோ யாழ்ப்பாணத்திலிருந்தும் கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் விடுதியில் தங்கியிருப்பதற்கும் விடுதியில் இடம் கிடைக்காதவர்கள் வெளியே அறைகள் எடுத்துத் தங்குவதற்கும் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டி ஏற்படுகிறது.

பிரதேசரீதியில் மாணவர்களைப் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்வதால் மாணவர்களின் செலவு குறையும். விடுதியில் இடமில்லாவிடினும் தங்கள் சொந்த வீட்டிலிருந்தே படிக்க வசதியிருக்கும்.

இந்த ஏற்பாடு வசதி குறைந்த ஏழை மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையுமென்று எதிர்பார்க்கலாம்.

இதுதவிர பிரதேசவாரியாக மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்படுவதால் தங்கள் பல்கலைக்கழகம் என்ற பிடிப்பு மாணவர்களுக்கு மட்டுமல்ல பெற்றோருக்கும் ஏற்படும். இதனால் பல்கலைக்கழகங்களின் வளர்ச்சியிலும் அக்கறை ஏற்படும்.

புதிய பிரிவுகளும் புதிய கட்டடங்களும் கூட அப்பகுதி மக்களின் பணத்தினாலேயே உருவாகுமென்றும் எதிர்பார்க்கலாம்.



தம்பிடத்தில் நம்பிக்கை கொள்பவரே பெருமையும் வலிமையும் எய்தியுள்ளனர். எந்நாட்டுச் சரிதையிலும் என்றைக்கும் காணப்படுவது இதுவே.

—விவேகானந்தர்

## சீன-இந்திய எல்லைப் பிரச்னை

புதுடில்லி, மார்ச் 12

பாரதமும் சீனவும் எல்லைப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளன.

பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயை சீனவில் இருந்து வந்தவிசேடபிரதிநிதி சந்தித்து ஒருமணிநேரம் பேச்சுவார்த்தைநடத்தியதனையடுத்து இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்த இணக்கத்தைப் புதுடில்லி வட்டாரங்கள் வரவேற்றுள்ளன. (உ)

---

இரத்தக்காயங்களுடன் என்னைக் கண்ட

# முஸ்லிம் பெரியார் பைத்தியம் என்று நினைத்தார்

## பயத்தில் 12 மைல் நடந்தேன்!

(யாழ்ப்பாணம்)

'இரத்தக்காயங்களுடனும், கிழிந்த சாரத்துடனும் என்னைக் கண்ட முஸ்லிம் பெரியார் எனக்கு 'பைத்தியம்' என நினைத்தார். அன்றிரவு முழுவதும்நான் காடுகளில் வெறுங்காலுடன் 12 கட்டை நடந்தேன்'

அனுராதபுரம் கல்விக்கந்தோரில் கடமையாற்றிய அந்தோனி எமிலியானுஸ் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அனுராதபுரம் கல்விக்கந்தோரில் கடமையாற்றிய அந்தோனி எமிலியனூஸ் கூறிய கூறியதாவது:-

காட்டிலுள்ள வகலா பாமுக்கு போன 7 பேரில் நானும் ஒருவன்.

குண்டர்கள் கையில் சிக்கியதும் வகலா மிகவும் கலங்கிப் பட்டார், அவர் எங்களை விட்டுச் செல்லும் போது என் கையைப் பிடித்தபடி 'இப்படி நடக்குமெனத் தெரியாது' என்றார். அதற்கென்ன பரவாயில்லை நீங்கள் போங்கள்' என்றேன்! மிச்ச கவலம்' என்று கூறிவிட்டுச் சென்றார்.

ஜெயராசாவை குண்டர்கள் அடித்துக்கொண்டிருந்த போது நான் மெதுவாக அவ்விடத்தைவிட்டு நழுவிவிட்டேன், காட்டுக்குள் சென்றுவிட்டு, ஜேட்டுக்கு வந்தேன்.

ஒரு சிங்களப்பெண் வந்து என்னை சிங்களவன் என நினைத்து எங்கே போகிறாய் என்றார் 'சிங்களவர்களை அடித்துவிட்டார்கள்' என்றேன். 'தமிழர்களைச் சாக்கில் கட்டி எரித்துவிட்டார்கள். ஆதலால் அந்தப்பக்கம் போகாதே காட்டுக்குள் ஓடி ஒழித்துவிடுமென்று கூறினார்.

பின் காட்டுக்குள் போனேன். இரவு நேரம் அது ஒரு சிங்கள கிராமம் கால் போன போக்கில் 'நடந்து போனேன். நாய்கள் குரைத்தன. நான் ஓடினேன். 'ஒடு கிறான்' என்று' கத்தினார்கள்.

பின் மறுஒரு சிங்கள கிராமத்துக்குப்போனேன். அங்கும் நாய் குரைத்தது. ஓடினேன். சேட் எல்லாம் குண்டர்களின் அடிக்கு நின்று பிடிக்கவில்லை. சராம் மட்டும்தான் இருந்தது. சாரத்தையும் கையில் பிடித்துக்கொண்டு ஓடினேன் உடம்பெல்லாம் காயம். உடம்பெல் அழுக்கு; இரத்தக்கறை.

மற்றொரு கிராமத்துக்கு வந்தேன் அது ஒரு முஸ்லிம் கிராமம். ஒரு முஸ்லிம் பெரியவர் என்னைப்பார்த்துவிட்டார். என் கோலத்தைப் பார்த்துவிட்டு 'நான் ஒரு 'பைத்தியம்' என நினைத்துக் கொண்டார். "நான் என் பயங்கரக் கதையைக் கூறினேன். என்னை வீட்டுக்குக் கூட்டிச் சென்று வெளிக்கிடக் கூடாதென்று கூறி வைத்திருந்தார் 3 நாள் அங்கு தங்கினேன். காடுகளில் நடந்த போது காலில் ஏற்பட்ட காயம்அதிகரிக்கவேயில் தெரிந்தது. நடக்கமுடியாத நிலை. என்னைச் சைக்கிளில் தான் அவர் ஏற்றிச் சென்றார்.

நான் அன்றிரவு 12 மைல் நடந்திருப்பதாக அந்த முஸ்லிம் பெரியார் கூறினார். அன்றிரவு முழுவதும் கண்விழித்து உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருந்தேன்.

மின்னேரியகுளம் என்ற தமிழ்க் கிராமத்திற்குச் சென்றேன். அங்கிருந்து மன்னார் சென்று பின் யாழ்ப்பாணம் வந்தேன்.

என்னுடன் காட்டுக்குள் வந்த சின்னத்தம்பியும், குணரத்தினமும் இறந்துவிட்டதாக அறிந்தேன்.

# தமிழருக்கு கீழ்வேலை செய்வதில்லை என்று ஊழியர் லீவில் நின்றார்'

(யாழ்ப்பாணம்)

"தமிழருக்குக் கீழ் இனி வேலைசெய்வதில்லையென்று என் கந்தோர் ஊழியரான கருணாதிலகா லீவில் நின்றார். பொதுத்தேர்தலுக்குப் பின் அவர் கந்தோருக்கு வரவில்லை. என் "சதையைத் தின்ன வேண்டும் எனத் துடிதுடித்தார்.'

மகாதந்திலாவ நீர்ப்பாசன கந்தோர் பிரதம லிகிதர் இறிஸ்டி சுந்தரம் சான்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

இறிஸ்டி சுந்தரம் மேலும் கூறியதாவது: ஆகஸ்ட் 17ம் தேதி காலை நான் கந்தோருக்கும் போனேன், அனுராதபுரத்திலிருந்து வந்த உத்தியோகத்தர்கள் கலவரம் ஆரம்பித்துவிட்டதாகவும் இங்கும் பரவும் என்றனர்.

அங்குள்ள குடியேற்றத் திட்ட இளைஞர்கள் தமிழரை தாக்கத் திரளுவதாக சொன்னார்கள். கந்தோர் ஊழியர் கருணாதிலகா அவர்களுக்கு தலைமைதாங்குவதாகவும் சொன்னார்கள்.

என் கந்தோரில் 2 தமிழ்ப் பெண் கிளார்க் இருந்தார்கள். அவர்களை மிகுந்தலையிலுள்ள சிங்கள நண்பர் வீட்டிற்கு அனுப்பினேன். தமிழ் உத்தியோகத்தர்கள் என்ன நடக்குமோ? எனப் பயந்து கொண்டிருந்தனர்,

நான் விடுதிக்குள் நின்றேன். என்னுடன் சிங்களப் பணிப் பெண் இருந்தார். சிங்களவர் தாக்கப்போவதால் அப் பெண்ணை ஊருக்குப் போகச் சொன்னேன். அவர் போக மறுத்துவிட்டார். 100 யார் தூரத்தில் குண்டர்கள் வந்துவிட்டனர்.

அங்கு வேறு ஒரு விடுதி 2 வருடமாக பூட்டப்பட்டிருந்தது. நானும் சிங்களப்பணிப் பெண்ணும் மெதுவாக அந்த விடுதிக்குள் சென்று மறைந்துவிட்டோம்

12-30 மணிபோல் 50 குண்டர்கள் வந்தனர். யன்னலால் பார்த்தேன். அவர்களின் பெயர் தெரியாது. கருணதிலகா தான் தலைமைதாங்கினார். ரத்தினசிங்கா, உபசேன ஆகியோரும் காணப்பட்டனர்

யேசுநாதருக்கும் அடித்தான்

வீட்டை உடைத்து உள்ளே சென்று என் உடைமைகளை சேதம்செய்தனர். என் வீட்டுக்குள் ஒரு யேசுகிறிஸ்துநாதர் படம் ஒன்று இருந்தது. அதனை ஒரு குண்டன் எடுத்துவந்து தண்ணீர்கொட்டி அடித்தான்

அதன் பின் நான் மறைந்திருந்த விடுதிப்பக்கம் வந்தனர், பூட்டை மண்வெட்டியால் உடைத்தனர். "எட்டிப் பார்த்துவிட்டு ஒருதரும்இல்லை போவோம்" என்று கூறிவிட்டு போய் மற்றவிடுதிகளை உடைத்தனர்.

இரவு முழுவதும் விடுதிகள் உடைத்த சத்தம் கேட்டது. மறுநாள் காலை என் கந்தோர் காவலாளியும், பியோனும் விடம் ஜீப்பை அனுப்பச் சொன்னேன் ஜீப் வந்தது. மிகுந்தலை அப்புகாமி வீட்டிற்குப்போனேன்

18ம் தேதி 2 பொலிசாரும் கிராமசேவகரும் காட்டுக்குள் பதுங்கியிருந்த தமிழர்களைத் தேடிக் கண்டுபிடித்துக் வந்தனர், சிங்களம் பணிப் பெண்ணை அனுப்பி அவர்களைக் கொண்டு, லொறியில் வந்தனர், அந்த லொறியில் அனுராதபுரம் சென்றோம்

மிகுந்தலை சந்தியில் 50 குண்டர்கள் லொறியைத் துரத்தி வந்தனர், லொறியில் 2 பொலிசார் றைபிள் வைத்திருந்தனர், ஒருவர் றைபிளைச் சாத்திவிட்டு பேசாமல் இருந்தார் மற்றவர் பெயர் அக்மீன், அவர் லொறியில் நின்று றைபிளைக் காட்டி எச்சரித்தார் குண்டர்கள் கலைந்துசென்றுவிட்டனர், அனுரதபுரம் சென்றோம்

அனுராதபுரம் கச்சேரியில் உணவோ, தண்ணீரோ இல்லை. 19ம் தேதி பஸ்ஸில் வவனியா வந்தேன்.

### விகாரையில் நின்றவர்கள்

வழியில் ஒரு பௌத்த விகாரை இருந்தது. அங்கு நின்றவர்கள் பஸ்களுக்கு கற்கள் வீசினார்கள். பௌத்த பிக்கு ஒருவரும் கல்வீசுவதைப் பார்த்தேன்.

58ம் ஆண்டு குழப்பம் நடந்த போது கல்முனையிலிருந்தேன். 58ம் ஆண்டு, கலவரம் நடந்த போது மருதங்கடவையிலிருந்தேன்.

71ம் ஆண்டு சேகுவரா கலவரத்தின்போது அனுராதபுரத்திலிருந்தேன் அப்போது தமிழர் தாக்கப்படுவார்கள் என்ற அச்சம் இருந்தது. ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.

நான் மிகுந்தலை அரசாங்க அதிபரிடம் 2,000ரூபா நஷ்டஈடு கோரி விண்ணப்பித்தேன் அவர் 50 ரூபாவிற்கு சிபார்சு செய்தார். [ச]

### சன்சோனி கமிஷன் விசாரணை

சிங்களப் பெண்மணி

## பணம் தந்து பஸ்ஸில் போகச் சொன்னார்

(யாழ்ப்பாணம்)

ஒரு சிங்களப்பெண் 5ரூபாய் பணம் கொடுத்து பஸ்ஸுக்கு போங்கள் என்று கூறி வழி அனுப்பிவைத்ததாக சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த பண்ணாகம் சங்கீத ஆசிரியர் கந்தையா சிவபிள்ளை கூறினார்-

பண்ணாகம் சங்கீத ஆசிரியர் கந்தையா சிவபிள்ளை கூறியதாவது:

நான் பம்பலப்பிட்டியில் ஒரு பரீட்சை மேற்பார்வையாளராக கடமையாற்ற 16ம் தேதி இரவு மெயில் ரயிலில் போனேன்.

மெயில் ரயில் அனுராதபுரத்தில் இரவு கொள்ளையடிக்கப்பட்டது. என்னைத் தாக்கினார்கள். யன்னலால் தூக்கிஎறிந்தனர். நான் பலத்த காயமடைந்தேன். அனுராதபுரம் பொலிசுக்கு சென்றேன்.

என்னுடன் மற்றும் தமிழர் வந்தனர். எனக்கு சிங்களம்தெரியாது.! கெட் அவுட், யாழ்ப்பாணத்தில் பொலிசாரை சுட்டுவிட்டு புகார் செய்யவா வருகிறீர்கள் என்றார். நாங்கள் திரும்பிவிட்டோம்.

கமிஷனர்: யார் அப்படி சொன்னது?- ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் ஒரு சிங்கள பெண் வழியில் வந்து என்ன நடந்தது? என்று கேட்டார். நடந்த கதையை சொன்னோம். மதவாச்சி பஸ்ஸில் போங்கோ என்று 5 ரூபா தந்தார். எங்களை மதவாச்சி பஸ்ஸில் ஏற்றிவிட்டார். நாங்கள் மதவாச்சி போனோம்.

மதவாச்சியிலும் கலவரம் ஆரம்பித்துவிட்டது. வவனியா நோக்கி நடந்துபோனோம். நீர்ப்பாசன இலாகா தமிழ் உத்தியோகத்தர் ஒருவர் வழியில் சந்தித்து 10 ரூபா தந்தார், தன் ஜீப்பில் ஏற்றிச் சென்று வவனியா பஸ்ஸில் ஏற்றிவிட்டார்.

வவனியாவில் நின்றபோது ஒரு புத்தூர் லொறி வந்தது. அதில் யாழ்ப்பாணம் போக ஏறினோம். அப்போது அங்கு நின்ற பொலிஸ் கான்ஸ்டபிள் இவர்களை அனுராதபுரத்தில் கொண்டுபோய்விட்டுவிட்டு வருமாறு கூறினார்.

லொறி றைவர் எங்களை இறக்கிவிட்டார். சற்றுத் தூரத்தில் போய் திரும்பும்படியும், தான் வந்து யாழ்ப்பாணம் ஏற்றிச் செல்வதாகவும் கூறினார் நான் லொறியில் படுத்திருந்தேன்,

யாழ்ப்பாணம் வந்ததும் மருதானை பொலிசிலிருந்து எனது இரண்டு சூட்கேசும் இருப்பதாக கடிதம் வந்தது. நான் மருதானை பொலிசுக்குப் போனேன் ஒரு சூட்கேஸ் தந்தார்கள். மற்ற சூட்கேசில் தான் என்து விலாசம் வைத்திருந்தேன். அந்த விலாசத்தைப் பிடித்துத் தான் எனக்கு அறிவித்திருந்தார்கள். அந்த சூட்கேசைத் தரவில்லை. நான் கேட்டபோது 'யோடாபோ' என்றனர்.

கமிஷனர்: மற்றது தரவில்லை?- ஆம, பொலிசார்தான் அதை எடுத்திருக்கவேண்டும்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-40
சனி, ஞாயிறு 2-30,
இவகுமார் — ஜெயசுதா
பட்டிக்காட்டுராஜா

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6 30, 9-45.
சனி, ஞாயிறு 2-30
ரஜனிகாந் - ஸ்ரீதேவி
மூன்று முடிச்சு

கடைசி இரண்டு தினங்கள்
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
ஜெமினி, பத்மினி, ராதா
நடித்த
சித்தி
[புதிய பிரதி]

வின்ஸா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
ரவிச்சந்திரன், கே ஆர். விஜயா,
விஜயகுமார்-நிர்மலா, அசோகன் மனோரமா
நடித்த
K. R. G பிக்சர்ஸ்
ஜானகி சபதம்

சாந்தி (யாழ். நகர்) போன் 7648.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி-பத்மினி நடித்த
பாலாடை —புதிய பிரதி—

நிதியுதவிக் காட்சி: கைதடி/வளர்மதி ச. ச. நிலையத்திற்காக 18-3-78 பி. ப. 2-30க்கு 'மருத நாட்டு வீரன்' இதற்காக முன்னர் விற்பனையான டிக்கட்டுகள் செல்லுபடியாகும்

ராணி தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்)
ஜெய்சங்கர் - ஜெய்சித்திரா
நடித்த
பணக்கார பெண்
புதிய ஜனாதிபதி அவர்களின் பதவியேற்பு வைபவ காட்சிகளும் காண்பிக்கப்படும்.

ராஜா தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார்
நடித்த
மேயர் மீனாட்சி

Rio Daily 10-30, 4-45, 7-00&9-30 p.m.
Jaffna (Phone: 7607)
Grand Thrilling Release
JACK PALANCE in
Welcome To Blood City
(Color-Western-Scope)

Regal (Jaffna) Daily 4-45, 7-00 & 9-45 p.m.
ROBERT SHAW
in
CUSTER OF THE WEST
(Color-Scope-Action)

From 15-3-78
SPANISH FLY (Color)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஆண்டவன் கட்டளை

லிடோ போன் 7698
(யாழ். நகர்) முத்துராமன், சிவகுமார், சுஜாதா
நடித்த
உறவு சொல்ல ஒருவன்


டெல் அவிவ் அருகே

# 20 இஸ்ரேலியர் சுட்டுக்கொலை

## அமைச்சரவை அவசரமாக கூடுகிறது

டெல் அவிவ், மார்ச் 12
டெல்அவிவிற்கு அருகேபலஸ்தீனிய கொமாண்டோக்கள் இஸ்ரேலிய பயணிகள் சென்ற பஸ்ஸைத் தடுத்துவைத்துள்ளனர்.

ஆயுதம் தாங்கிய கொரில்லாக்களால் துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டதால் 20இஸ்ரேலியர் கொல்லப்பட்டதாகவும் அறுவர் காயமுற்றதாகவும் இஸ்ரேலிய வானொலி அறிவித்தது

### யு. எஸ். விஜயம் ஒத்திவைப்பு

இது இவ்வாறு இருக்க, இஸ்ரேலியப் பிரதமர் பெகினும் வெளிநாட்டமைச்சர் மோஷே தயானும் தமது அமெரிக்க விஜயத்தைப் பின்போட்டுள்ளனர்.

அமெரிக்கா சென்றிருந்த இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் வைஷ்மனும் திருப்பி யழைக்கப்பட்டுள்ளார்.

இஸ்ரேலிய அமைச்சரவை அவசரக்கூட்டம் ஒன்றினை நடத்தவிருக்கிறது. [உ]

# "ஆபாசம், வன்முறை தூண்டலுக்கு படங்களில் அனுமதிஇல்லை"

## அமைச்சர் அத்வானி அறிவிப்பு

சென்னை, மார்ச் 12
'புதிய திரைப்பட தணிக்கை வழிகாட்டு நெறிகளுக்கமைய ஆபாசம், வன்முறை கீழ்த்தர உணர்வுகளைத் தூண்டக்கூடிய காட்சிகள் அனுமதிக்கப்பட மாட்டாது' என்று பாரத தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அத்வானி கூறினார்

சென்னையில் தணிக்கை அங்கத்தினர் மத்தியில் பேசுகையிலேயே அமைச்சர் இவ்வாறு சொன்னார்.

'மக்களுக்கு கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடிய சக்திவாய்ந்த சாதனமாக திரைப்படங்கள் விளங்குகின்றன. எனவே தணிக்கைப் பகுதி அங்கத்தவர்கள் பொறுப்புணர்ச்சியுடன் தமது கடமையைச் செய்ய வேண்டும்' என்றும் அமைச்சர் தமது உரையில் சொன்னார். (உ)

# 'தாழ்வு மனப்பான்மை கூடாது'

திருச்சி, மார்ச் 12
'ஹரிஜனங்களுக்கு இடையே தாழ்வு மனப்பான்மை இருக்கக் கூடாது'' என்று தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி கூறினார்.

திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சிஒன்றில் அவர் மேலும் பேசுகையில், "நாட்டுஅபிவிருத்தியில் கிராமிய வளர்ச்சிக்கே முதலிடம் அளிக்கப்படும்' என்று தெரிவித்தார். [உ]

# 'கார்ட்டர் முழுப்பங்கு எடுக்கவேண்டும்'

கெய்ரோ, மார்ச் 12
மத்திய கிழக்குப் பிரச்சினையில் அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் முழுமையான பங்கு எடுக்கவேண்டும் என்று எகிப்திய அதிபர் அன்வர் சதாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கெய்ரோவில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் அவர் ''ஜோர்தான் மேற்கு கரையில் இஸ்ரேலியத் துருப்புகளின் நிலைப்பாடு சமாதானத்திற்குப் பங்கம் விளைவிக்கும் என்றும் சொன்னார். [உ]

# 'குண்டர் துவக்குடன் வரவே மதில்களால் பாய்ந்தோம்'

## கொழும்பு மோட்டார் பதிவு உத்தியோகத்தர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)
"50 குண்டர்கள் துப்பாக்கியுடன் எமது வீட்டின் முன் பக்கத்தால் வந்தனர். நாங்கள் மதில்களால் பாய்ந்து சென்றோம்" என்று கொழும்பு மோட்டார் வாகனக் கந்தோரிப் பதிவுகாரர் சோதி சின்னத்தம்பி சாட்சியமளிக்கையில் சொன்னார். அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது:

நான் நுகேகொடையில் வசித்துவந்தேன். என் குடும்பத்துடன் இருந்தேன். ஆகஸ்ட் 19ந் தேதி 4 மணிக்கு ஆனந்த கங்கரீட் வேர்க்ஸ் நிலையத்தைக் கொள்ளையர்கள் கொள்ளையடித்ததாக அறிந்தேன் அவர்கள் காரில் செல்வதாகவும் அறிந்தேன் நான்வீட்டிலிருந்து கார் நம்பரைக் கவனித்தேன். 4 மணிக்கு என் மகன் வந்து, டிரம தொழிற்சாலை உரிமையாளர் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டதாகக் கூறினார் குண்டர்கள் எங்கள் வீடு நோக்கி வருவதாகவும் கூறினார் நான் உடனே வீட்டைப் பூட்டிவிட்டு என் மனைவியையும் 2 மகள்களையும் அடுத்த வீட்டிற்குப் போகச் சொன்னேன்

50 குண்டர்கள் கத்தி துவக்குடன் வந்தார்கள். அடுத்த வீட்டுக்குள் மறையும்படி நான் மகள்களுக்கு கூறினேன் நாங்கள் மதில்களால் பாய்ந்து சென்றோம். குண்டர்கள் முன் கதவால் வந்தனர்.

நான் பிரதான வீதியைக் கடந்து பேராசிரியர் பெரேரா வீட்டில் போய் கொழுவலைப் பொலிசுக்குப் போன் பண்ணினேன். நுகேகொடை ஆட்பிரிவிலுள்ள சுந்தரலிங்கத்திற்கும் போன் செய்தேன். கமிஷனர்: நுகேகொடைக்கா? ஆம் அங்கு ஒரு பொலிஸ் பிரிவு இருந்தது. நான் மேல் மாடியிலிருந்து நிலைமையைக் கவனித்துக்கொண்டிருந்தேன். கொழுவலைப் பொலிசார் வரவில்லை. 10 நிமிடத்திற்குள் சுந்தரலிங்கம் மோட்டார் சயிக்கிளில் வந்தார். ஒரு கான்ஸ்டபிளும் வந்தார் அவர் றைபிள் வைத்திருந்தார் அவர் 10 நிமிடத்தில் திரும்பிச் சென்றார் அவரால் நிலைமையைச் சமாளிக்கமுடியவில்லை

குண்டர்கள் பல பொருட்களைக் கொள்ளையடித்தனர். கோழிப்பண்ணையையும் சூறையாடினர். அப்போது 6 மணியிருக்கும். என் மனைவிக்கும் 4 பிள்ளைகளுக்கும் என்ன நடந்தசென்று எனக்குத் தெரியவில்லை. என் மகள்கள் 2 பேரையும் கூப்பிட விரும்பினேன். நான் பின் பக்கத்தால் சென்று பார்த்தேன் இல குண்டர்கள் என் வீட்டின் பின் பகுதிக்குத் தீ வைத்தார்கள் பின் இரவு 9 மணிக்குப் பேராசிரியர். குண்டர்கள் சுற்றி வளைப்பதாகவும் என் உயிருக்கு ஆபத்தென்றும் பின் பக்கத்தால் தப்பிச் செல்லுமாறும் கூறினார்.

### அடுப்படிக்குள் சென்றேன்

ரோட்டில், குண்டர்கள் கண்ணில் காணாமல் செல்ல முடியாததால் நான் 6 அடி சுவரை ஏறித் தாண்டி, திரு. விஜயதிலகா வீட்டிற்குப் போனேன். அவரின் அடுப்படிக்குள் சென்றேன். என்னைக் கண்டதும் என்னைக் கூட்டிச் சென்றனர். விஜயதிலகா வாசலில் நின்று நிலைமையை அவதானித்துக் கொண்டிருந்தார்.

என்னைக் கண்டதும் என் குடும்பத்தினரைப் பற்றிக் கேட்டார். என்னை மிரிகானை பொலிஸ்நிலையத்திற்குக் கூட்டிச் செல்வதாக அவர் உறுதியளித்தார். நாங்கள் பின் வேலியால் 20 யார் சென்றதும் சிலர் கூச்சல்போடுவது கேட்டது. அவர் என்னை அங்கு நிற்கச் சொல்லிவிட்டு சுப்பிரமணியம் வீதிக்குச் சென்று பார்த்துவிட்டு பலத்த அபாயமென்று கூறினார். அவர் என்னை இரவு தங்கும்படி கூறிப் படுக்கையும் தந்தார்.

### வீட்டை உடைத்தனர்

20ந் தேதி அதிகாலை இவர் என் வீட்டை உடைப்பது கேட்டது. நான் அங்கிருந்தால் உயிருக்கு ஆபத்தென்று அவருக்குக் கூறினேன். பின் வேலியால் கப்தராமா வீதி வரையாவது பாதுகாப்பளிக்குமாறு சொன்னேன். அவர் முதலில் தயங்கினாலும் பின் சம்மதித்தார். நான் ஒன்றரை மைல் நடந்த பின் மிரிகானை பொலிஸ்நிலையத்தை அடைந்தேன். அங்குள்ள அதிகாரியிடம் கூறினேன். அப்போது அதிகாலை 1 45. என் பகுதி கொழுவலைப் பொலிஸ் பிரிவுக்குக் கீழ் வருவதாக அவர் கூறினார் கொழுவலைப் பொலிசுக்குச் செல்வதுமுடியாதகாரியமென்று அவருக்குச் சொன்னேன். அதனால் தான் இங்கு வந்ததாகவும் கூறினேன். இத்தகவலைக் கொழுவலைப் பொலிசுக்குச் சொல்லுமாறு கெஞ்சினேன் அவர் ரேடியோ

(5 ம் பக்கம் பார்க்க)


நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
எம். ஜி ஆர். — லதா
நடித்த
நினைத்ததை
முடிப்பவன்

# தியேட்டர் முழுவதும் எரிந்து போய்விட்டது

## கல்கமுவ தியேட்டர் முதலாளி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

'58ம் ஆண்டு கலவரத்தில் எனக்கு ஒன்றும் நடக்கவில்லை பொய் வதந்தியாலேயே 77 ஆகஸ்ட்டில் கல்கமுவையில் கலவரம் மூண்டது' என்று கல்கமுவ தியேட்டர் உரிமையாளர் என். கே. சோமசுந்தரம் சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் சொன்னார்.

அவர் கூறியதாவது:

கல்கமுவாவில், பலவருடங்களாக இருக்கின்றோம். எங்கள் குடும்பத்திற்கு மூன்று வீடுகள் உண்டு. ஆகஸ்ட் கலவரத்தின் போது மூன்று வீடுகளும் சேதமடைந்தன.

எனக்கு கல்கமுவவில் 'நவ சோதி' சினிமா என்று ஒரு தியேட்டர் இருந்தது அது எல்லாம் எரிந்துவிட்டது. எரிந்த யந்திர உதிரிப்பாகங்களை தங்களுக்கு காண்பிக்க கொண்டு வந்திருக்கிறேன். எனக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது

**வதந்தியே காரணம்**

'58ம் ஆண்டு கலவரத்தில் எனக்கு ஒன்றும் நடக்கவில்லை பொய் வதந்தியினால் இந்த கலவரம் ஏற்பட்டது. எனக்கு 3 மொழியும் தெரியும்.

58 ஆண்டு கல்கமுவாவில் ஒரு பொலிஸ் நிலையம் தான் இருந்தது 77ல் 4 பொலிஸ் நிலையம் இருக்கிறது அப்படியிருந்தும் கலவரம் நடந்தது

ஏ எஸ் பி பத்திராஜ என் வீட்டொன்றில் குடியிருந்தார். திடீரென்று அவர் இந்த வீட்டை விட்டு வெளியேறியதும் என் வீடு தாக்கப்பட்டது

கல்கமுவாவில் 17ம் தேதி காலை 6 மணிக்கு கலவரம் ஆரம்பமானது 3 நாள் தொடர்ந்து நடந்தது பொலிஸார் பேசாமல் இருந்தனர் எவரையும் கைதுசெய்யவில்லை

கல்கமுவாவில் உள்ள 8 தமிழ் கடைகளும் உடைத்து கொள்ளையடிக்கப்பட்டன.

கல்கமுவாவில் உள்ள தமிழ் ஊழியர் தாக்கப்பட்டதுடன், அவர்கள் விடுதியும் சேதமாக்கப்பட்டது கல்கமுவ இந்துக் கோவிலும் தாக்கப்பட்டது ஒரு கிழமைக்கு முன் தான் அக் கோவிலில் கும்பாபிஷேகம் நடைபெற்றது பத்தாயிரம் ரூபாவரை நஷ்டம் ஏற்பட்டது.

**வீதியில் கிடந்ததாம்**

பொலிஸாருக்கு கொள்ளை பற்றி புகார் செய்யப்பட்டது கொள்ளையடித்த பொருட்கள் எங்கேயிருக்கிறது, யார் வைத்திருக்கிறார்கள் என்றும் புகாரில் கூறியேனும் பொலிஸார் கொள்ளையடித்த பொருட்களை மீட்டுவந்தனர். ஆனால் அப் பொருட்கள் வீதி அருகில் கிடந்ததாகத் தெரிவித்தனர் பொருட்களை வைத்திருந்தவர்கள் மீது ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

மாவனி போட் கிட்டத்தில் உள்ள தமிழ் பொறியியலாளர் வீட்டை தாக்கியபோது குண்டர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது இதில் இரு குண்டர்கள் கொல்லப்பட்டனர். கல்கமுவாவில் கலவரம் ஆரம்பிக்க இதுவும் காரணமாயிருக்கலாம்.

—

## குண்டசாலை மாணவர் பற்றிக் கமிஷனிடம் புகார்

(யாழ்ப்பாணம்)

குண்டசாலை மாணவர்கள் இன்னும் வகுப்பிற்குச் செல்லவில்லை என்று குண்டசாலை விரிவுரையாளர் ஆறுமுகம் பேரின்பநாயகம் சன்சோனி கமிஷன் முன் தெரிவித்தார்.

மாணவர்கள், கலவரத்தின்போது தாக்கப்பட்டதாகவும் கராஜ் ஒன்றில் வகுப்பு நடத்துமாறு மாணவர்கள் பிரதமரைக் கோரியதாகவும் கூறினார். சிங்கள மாணவர்களுக்கு வகுப்பு நடப்பதாகவும் சொன்னார்

அவிசாவலை கொலைவழக்கு

# விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

[கொழும்பு]

அவிசாவலை கொலை வழக்கில் விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலைசெய்யப்பட்டனர்.

இவ்வழக்கு அவிசாவலை மேல் நீதிமன்றத்தில், நீதிபதி ஜி ரி. டி பண்டாரநாயக்கா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது

இவ்வழக்கில் 76-ம் ஆண்டு நவம்பர் 7ம் திகதி டபிள்யூ விமலசேன, எம் டி. மெலின் ஆகியோர் டபிள்யூ பொடி சிங்காவை கொலைசெய்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜி ஜி பொன்னம்பலம் [ஜூனியர்] ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஜாவிட் [யூசுப்] ஆஜரானார்.

சங்களம் பேசும் ஜூரிசபை முன் 3 நாள் நடந்த விசாரணையின் பின் [சாட்சியம் முரண்பாடாகவும், திருப்திகரமற்றதாகவும் இருப்பதாக ஜூரிசபையினர் கூறி விசாரணையைத் தொடரவிரும்பவில்லை] என ஏகமனதாகக் கூறினார்கள், இதைத்தொடர்ந்து எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர். (ஸ)

# படுக்கையில் கத்திவெட்டு!

(கொடிகாமம்)

அதிகாலைவேளையில் இளம் மனைவியுடனும் பச்சிளம் பாலகனுடனும் கண் அயர்ந்திருந்த கட்டுவில் வடக்கைச் சேர்ந்த 28 வயது வாலிபன் சுருணலிங்கம் குணரத்தினம் என்பவர் படுக்கையில்வைத்தே கத்திவெட்டுக்கு இலக்கானாராம்.

அவ்வேளையில் அவரது மனைவி ஐயோ ஐயோ எனச் சத்தமிட்டதால் அயலவர் ஓடிவரவே சந்தேகநபர் ஓடிவிட்டாராம்,

குணரெத்தினத்தின் உடலில் 5 வெட்டுக் காயங்களுடன் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரைத் வெட்டுக் காயப்படுத்தியதாக சந்தேகத்தின் பேரில் கே சுந்தரலிங்கம் என்பவரை பொலிசார் தேடிவருகின்றனர் (ப உ)

## நாகொடையில் முக்கொலை

(காலி)

நாகொடையில் அமைந்துள்ள தலங்காஸ்வெல எனும் பிரதேசத்தில், படமாளிகை ஒன்றில் ஏற்பட்ட தகராறின் விளைவாக முக்கொலை ஒன்று நடைபெற்றுள்ளது. விஜயதாசா (26 வயது), சந்திரதாச ஆகியோர் ஸ்தலத்திலேயே மரணமடைந்தனர். ஜெயசேன என்பவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமடைந்தார் மற்றும் அமரதாச என்பவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அபாயகரமான நிலையில் இருப்பதாகத் தெரியவருகிறது. இக்கொலைகளைச் செய்ததாகச் சந்தேகிக்கப்படும் உடலமத்தையைச் சேர்ந்த காரா என்பவரை பொலிசார் தேடிவருகின்றனர்.

தியேட்டரில் எழுந்த வாக்குவாதம் ஒன்றைத் தொடர்ந்து மேற்படி சந்தேகநபர் கத்தியொன்றினால் [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## பூட்டோவுக்கு இவ்வாரம் தீர்ப்பு

லாகூர், மார்ச் 12

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவுக்கு எதிரான கொலைவழக்கில் 4 தினங்களுக்குள் தீர்ப்பு வழங்கப்படும்

இத்தீர்ப்பை லாகூர் நீதிமன்றம் வழங்கும்.

பூட்டோவுக்கு எதிராக வேறு வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# குண்டர்கள் துவக்குடன்—

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் தகவல் அனுப்பினார்

அதன் பின் கொழும்பு தெற்கு ஆஸ்பத்திரிக்குச் செல்லும் ஜீப் ஒன்றில் என்னை ஏறுமாறு சொன்னார்கள்.

என் 3 மகன்களும் இருந்த வீட்டிற்கு வந்தோம் இருவரும் மூகல் நான் இரவே வீட்டைவிட்டுச் சென்றுவிட்டதாக வீட்டுச் சொந்தக்காரர் கூறினார். அவர்கள் 200 யார் தூரத்திற்கு அப்பாலுள்ள ஒரு வீட்டில் இருப்பதாகவும் இடத்தைக் கூறவும் மறுத்துவிட்டார். அதே ஜீப்பில் நான் தொடர்ந்து சென்றேன்

நான் கொருவலைச் சந்தியில் இறக்கப்பட்டேன். நான் கொருவலைப் பொலிஸ்நிலையத்திற்கு அதிகாலை 4 மணிக்குச் சென்றேன் அங்கு எவரும் என் வாக்குமூலத்தைப் பதிவு செய்யவில்லை

காலை 9 மணிக்கு கொருவலை பொலிஸ்நிலையத்திற்குப் பிரதமர் ஜே ஆர். ஜெயவர்த்தனவும் அமைச்சர் ஆர். பிரேமதாசாவும் வந்தனர். அவர்கள் என்னை அங்கு கண்டனர். நான் பிரதமருக்கு என் கதையைக் கூறினேன் அவர் என் கதையைக் கேட்டதும் உடனே பொலிஸ் அதிபரை 'இப்படித்தான் நீங்கள் வேலைசெய்கிறீர்களா? என்றார் எனக்குப் பிரதமரைத் தெரியும். உடன் நடவடிக்கை எடுக்குமாறு கூறினார். பொலிசார் ஊதுகுழப்படைந்தனர். ஜீப்பில் எஸ். ஐ யும் ஒரு கான்ஸ்டபிளும் வந்தனர். என் மனைவியையும் 2 மகன்களையும் கண்டுபிடித்தோம், என் 2 மகன்களும் வேறொரு வீட்டில் ஒழித்திருப்பதாக மகன் கூறினார் நாங்கள் அவ் வீட்டிற்குப் போனதும் வீட்டுக்காரர் என் மகனைக் காட்டப் மறுப்பட்டார் என் மகன்களும் வெளியில் வர அஞ்சினர் 30 நிமிடத்தின் பின்னர் அவர்களை அடுப்படி ஊடாக அனுப்புமாறு சொன்னேன், நான் வீட்டுக்குச் சென்று என் மகன்களை ஜீப்புக்குக் கூட்டிவந்தேன் மற்றும் 3 மகன்களைக் காணவில்லை. 2 நாட்களின் பின் அவர்களைச் சரஸ்வதி ஹோலில் சந்தித்தேன்

**சம்பவம் அறிந்தேன்**

ஜீப்பில் சென்றபோது என் மகன்கள் தங்களுக்கு ஏற்பட்ட கதியைக் கூறினார்கள். முதல் நாள் 6 மணிக்கு வீட்டைவிட்டுப் போகுமாறு வீட்டுக்காரர் சொன்னதால் வெளியேறியதாகவும் அப்போது குண்டர்கள் துரத்தியதாகவும் தாங்கள் ஓடியபோது விழுந்து முழங்காலில் காயம் ஏற்பட்டதாகவும் கூறினார் காங்கள் சிக்கியிருந்தால் கொன்றிருப்பார்கள் என்றும் கூறினர்.

20ந் தேதி 2 மணிக்கு சரஸ்வதி கோலுக்குப் போனோம் 27ந் தேதி சரஸ்வதி கோலிலிருந்து புறப்பட்டோம். ஏனெனில் 23ந் தேதிக்குப் பின் இராணுவப் பாதுகாப்பு இல்லை என அறிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திற்கு ரயிலில் வந்தோம். வரும்போது என் பொருட்கள் ஒருவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்தது. இது பற்றி யாழ்ப்பாணம் இணைப்பு அதிகாரிக்குப் புகார் செய்தேன்.

செப்டம்பர் 19ந் தேதி நான் கொருவலைப் பொலிசுக்குப் போனபோது யாழ்ப்பாணம் இணைப்பு அதிகாரியால் அனுப்பப்பட்ட அறிக்கையைக் காணவில்லை. நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை. குண்டர்கள் மீது நடவடிக்கை எடுக்கவுமில்லை. பொருட்களை மீட்கவுமில்லை.

நான் நவம்பரில் என் வீட்டுக்குப் போனபோது, வீடு உடைக்கப்பட்டதாக அறிந்தேன். நான் பொலிசில் புகார் செய்தேன்.

## குண்டர்கள்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

22ம் தேதி நான் தோட்டத்திற்கு பொலிஸ் பாதுகாப்புடன் சென்று என் உடைமைகளை எடுத்து வந்து பொலிஸ் நிலையத்தில் வைத்தேன்

நான் பொலிஸ் நிலையத்திலிருந்தபோது யாழ்ப்பாணம் நாகலிங்கரை தாக்கப்பட்டதாகவும் பௌத்த பிக்கு தாக்கப்பட்டதாகவும் கதைத்தார்கள் 7 சிங்கள மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டு பெட்டிகளில் அடைக்கப்பட்டு கண்டிக்கு அனுப்பப்பட்டதாகவும் கதைத்தனர்

19ம் தேதி பொல்காவலை இரசன் கோரில் குண்டர்களால் தாக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதை அறிந்தேன், நான் 29ம் தேதி ரயிலில் யாழ்ப்பாணம் வந்தேன். தோட்ட கம்பனிக்கு பாதுகாப்புக்காக யாழ்ப்பாணம் [illegible] கடிதம் எழுதினேன்,

# யாழ் ரோட்டரி நடத்தும் சிறந்த நடத்துநர் தெரிவு

இன்று இலட்சோபலட்சம் மக்களின் நாளாந்த இடப்பெயர்ச்சிக்கு ஜீவநாடியாகத் திகழ்வது இலங்கைப் போக்குவரத்துச்சபை என்றால் மிகையாகாது. இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவை சிறப்பதற்கு உயிரோட்டமாக திகழ்பவர்கள் பஸ் நடத்துநர்கள். பஸ் நடத்துநர்கள் சிறந்த முறையில் சேவை செய்தால் சபைக்கும் மக்களுக்கும் பேருதவியாக அமையும்.

பஸ் நடத்துநர்களை மக்கள் பணியில் மேலும் ஊக்கப்படுத்தி உற்சாகமளிக்கும் நோக்கமாக சிறந்த பஸ் நடத்துநரைத் தெரிவுசெய்து அவர்களுக்கு தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம் போன்ற பல அரிய பரிசுகளை அளிக்க யாழ் ரோட்டரி கழகம் முன்வந்துள்ளது.

புதுவருடப் பிறப்பை யொட்டி யாழ் நடக்கும் இப்போட்டியில் சிறந்த முறையில் சேவை செய்யுமால் நடத்துநரை தெரிவு செய்யும் உரிமையை பொதுமக்களிடமே ரோட்டரிக் கழகம் விட்டுள்ளது

எனவே கீழ்க்காணப்படும் கூப்பனில் பொதுமக்கள் தங்களுக்கு சிறந்த முறையில் சேவைசெய்யும் பஸ் நடத்துநரின் பெயரைக் குறித்து இன்றே யாழ். ரோட்டரிக் கழகத்திற்கு அனுப்பி தங்கள் தீர்ப்பை அறிவிக்கவேண்டும்.

இது பொதுமக்கள் தங்கள் சமூக கடமையை ஆற்றும் கடமையுமாகும் மறந்துவிடாதீர்கள். முடிவுதிகதி 4-4-78.

நடத்துநரின் பெயர்.........................................

பதிவு இலக்கம்.........................................

அனுப்புபவரின் பெயர் .........................................

அனுப்புபவரின் விலாசம் .........................................

திகதி .........................................

ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து [illegible] பா. [illegible] 14. [illegible] யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (வ)

# சைக்கிளைத் தூக்கி தலையில் போட்டார்

(யாழ்ப்பாணம்)

வின்சற் ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை தங்கராசா கூறியதாவது: நான் காலை 8 மணிக்கு கந்தோர் போனபோது யாழ்ப்பாணத்தில் கலவரம் என்றும் பொலிஸார் தாக்கப்பட்டதாகவும் இருவர் கொல்லப்பட்டதாகவும் அறிந்தார்கள் 9-30 மணிக்கு அனுராதபுரத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டு தமிழ் கடைகள் உடைக்கப்படுவதாக அறிந்தேன். நான் உடனே அதிபருடன் தொடர்பு கொண்ட போது நகரத்தில் குழப்பமென்றும் வரவேண்டாமென்றும் கூறினார். ஆதலால் தொடர்ந்து கந்தோரில் இருந்தேன் அன்று மாலைவரை கந்தோரில் இருந்தேன் அங்கு 2 தமிழர் இருந்தனர் 18ம் தேதி காலை 8-30 மணிக்கு குண்டர்கள் கொட்டன் கத்தியுடன் வந்து "தமிழர்களை வெளியில் அனுப்பு" என்று கூச்சலிட்டனர் பின் கந்தோருக்குள் நுழைந்து அடித்தார்கள். வெளியில் இழுத்து தலையில் அடித்தனர்.

ஒருவர் சயிக்கிளை கொண்டு வந்து தலையில் போட்டார் தொடர்ந்து அடித்தனர் பின் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டேன் உடனே வைத்து மருந்து கட்டினர்.

19ம் தேதி சிகிச்சை அளிக்கப்படவில்லை பின் பஸ்ஸில் அனுராதபுரம் பொலிஸ் நிலையம் சென்று இங்கு வந்தேன்."

கொண்டாவிலை சேர்ந்த துரைராசா புஸ்பலிங்கம் கூறியதாவது: நான் மனைவியுடன் கொழும்பு சென்றிருந்தேன் மனைவி கர்ப்பிணியாக இருந்தார் 19ம் தேதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டோம் கலவரம் குறைந்து விட்டதாக அறிந்ததால் வந்தோம் பஸ்ஸில் மனைவியுடன் புறப்பட்டு அனுராதபுரம் பஸ் நிலையத்தில் இறங்கினோம் நான் முன்பு அங்கு வேலை செய்ததனால் எனக்கு பலரை அங்கு தெரியும் யாழ்ப்பாணத்திற்கு பஸ் இல்லை என்று சொன்னார்கள் எவரும் கலவரம் பற்றியோ அனுராதபுரத்தில் தமிழர் தாக்கப்பட்டது பற்றியோ எச்சரிக்கவில்லை எனக்குத் தெரிந்த ஒரு ஒவசியரிடம் செல்ல விரும்பினேன். கச்சேரியைக் கடந்து சென்ற போது குண்டர்களைக் கண்டோம். கடைகளும் தாக்கப்பட்டிருந்தன அதனால் திரும்பி வந்தோம்

யாழ்ப்பாணத்திற்கு ரயிலில் செல்ல முடிவு செய்தோம் ரயில் நிலையம் சென்றோம். அங்கு சனக்கூட்டம் நின்றது. பிரயாணிகளும் நின்றனர்.

சிலர், ரயில் நிலையத்தில் தமிழ் எழுத்துக்களை அழித்துக் கொண்டிருந்தனர். சிலர் தமிழ் பெயர் பலகைகளை அகற்றிக் கொண்டிருந்தனர். ஒருவர் தமிழ் பெயர்ப் பலகையை அகற்றும் போது அங்கு நின்ற பொலிஸ் கான்ஸ்டபிள் றைபிளை காட்டி அப்பலகையை மாட்டச் சொன்னதும் அவர் மாட்டி விட்டு சென்றார்

என்னிடம் ஒருவர் வந்து "எங்கிருந்து வருகிறீர்கள்" என்றார். நான் கொழும்பிலிருந்து என்று சொன்னேன் என மணிக்கூட்டுக்கையை பிடித்துக் கொண்டு. என் சூட்கேசைப் பறிக்கப் பார்த்தார் இழுபறிப் பட்டோம். 15 பேர் வந்து அடித்தார்கள். நான் மயங்கி விட்டேன். பின் ஆஸ்பத்திரியில் மயக்கம் தெளிந்தது. மனைவியும் ஆஸ்பத்திரியில் நின்றார் என்ன நடந்தது என்று கேட்டேன். தன்னை சிலர் பாதுகாத்து ஒரு வீதியில் வைத்திருந்து பின் பொலிஸ் நிலையம் அனுப்பியதாக கூறினார்.

ஆஸ்பத்திரியில் எனக்கு சிகிச்சையளிக்க பயப்பட்டனர் ஒருநாள் காலை என்னை தாதிகள் விடுதிக்கு கூட்டிச் சென்று இரகசியமாக சாப்பாடு தந்தனர்.

கமிஷனர்: மனைவிக்கு என்ன நடந்தது?-சிங்கள உத்தியோகத்தர்கள் சிலர் அவரை பாதுகாத்து, ஒரு விடுதியில் வைத்திருந்து பின் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

## நாகொடையில்......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] குத்திக் காயப்படுத்தியதாகவும், மூவர் கொலையுண்டதாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது. (ப)

## கணவருடன்—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வவுனியாவில் மரணச்சடங்கை நடத்தக்கூடாதென இன்ஸ்பெக்டர் கூறினார் அப்படி வவுனியாவில் நடத்தினால் சடலத்தைத் தரமாட்டோம் என்றார் அதனால் யாழ்ப்பாணம் கொண்டுவந்து மரணச் சடங்கு நடத்தினோம் பணம் செலவுசெய்ய முடியுமாவென்றும் கேட்டார் பின் சடலம் கொண்டுவரப்பட்டது

எனக்கு 7 பிள்ளைகள் உண்டு ஐயா என்று விக்கி விக்கி அழுதார் முதல் பிள்ளைக்கு 19 வயது கடைசிப் பிள்ளைக்கு 6 வயதென்று சொன்னார்

24ந் தேதி வருவதென்று சொல்லிவிட்டுப் போனவர் பிரேதமாகப் போய்விட்டாரென அழுதபடி கூறினார்

மட்டக்களப்பைச் சேர்ந்த மோகனதாஸ் கனகாம்பிகை கூறியதாவது: நான் தற்பொழுது யாழ்ப்பாணம் ஐ[illegible] கோவிலடியில் இரண்டு பிள்ளைகளுடன் இருக்கிறேன்.

நான் மட்டக்களப்பில் என் கணவருடன் வசித்துவந்தேன் என் கணவர் மரக்கறி வியாபாரம் செய்பவர் கண்டி நுவரேலியாவுக்குப் போய் அவர் மரக்கறி வாங்கிவருவார்

1977 ஆகஸ்ட் 15ம் தேதி மட்டக்களப்பிலிருந்து 5 000 ரூபாவுடன் மரக்கறி வாங்கப் புறப்பட்டார் அப்பொழுது இனக் கலவரம் நாட்டில் நடக்கிறதெனத் தெரியாது அதற்குப் பிறகு கேள்விப்பட்டேன் போனவர் திரும்பி வரவேயில்லை என்ன நடந்ததோ தெரியாது பத்திரிகையிலும் இது பற்றித் தெரிவித்தேன் அவர் வரவில்லை எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை அதனால் நான் மட்டக்களப்பில் இருக்கமுடியாத நிலையேற்பட்டது இரண்டு பிள்ளைகளுடன் யாழ்ப்பாணம் வந்தேன்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 63-ம் இலக்க [illegible] 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ந் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu Post Box No 49, Jaffna. Telegrams Eelanadu Telephone 389 Registered as a Newspaper in Srilanka

# பொலிஸ் நிலையத்தருகே இருந்த கடையும் எரிந்தது

## கெக்கராவ நீர்ப்பாசன ஊழியர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"நகரில் இருந்த கடைகள் அதிகாலை 1 மணிக்கு எரியத்தொடங்கின பொலிஸ் நிலையத்திற்கு 25 யார் தொலைவில் இருந்த கடை ஒன்றும் எரிந்தது" என்று சன்சோனிக் கமிஷன் முன்னிலையில் கெக்கராவையில் கடமையாற்றிய கந்தையா இராசப்பா வைத்திலிங்கம் சாட்சியமளிக்கையில் கூறினார்

கந்தையா இராசப்பா வைத்திலிங்கம் தொடர்ந்து கூறியதாவது: 3 சந்ததியாக நான் அனுராதபுரத்தில் வாழ்ந்து வருகிறேன், எனக்கு நிரந்தரமாக அனுராதபுரத்தில் வீடும் காணியும் உண்டு. நான் கெக்கராவை நீர்ப்பாசன கந்தோரில் ஆகஸ்ட் 77ல் கடமையாற்றினேன்

அன்று நான் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்க ஜீப்பில் சென்றிருந்தேன். 3-30 மணிக்கு கிரிபண்டாவும், பிரேமரத்தினவும் வந்து என்னை மேலதிகாரி உடனடியாக வருமாறு தெரிவித்தனர்

அனுராதபுரத்திலும், மகோவிலும், இனக்கலவரம் ஆரம்பித்துவிட்டதாக கூறினார்கள். நான் திரும்பிச்சென்றேன் கிரிபண்டாவுடன் காரில் சென்றேன். ஜீப் தொடர்ந்து வந்தது.

### ஜீப்பில் ஏற்றினேன்

ஆண்டபலே சந்தியில் கன்ஸ்டபிள் ரத்னநாயக்கா இரு சந்தேக நபர்களுடன் நின்றார். கெக்கராவ வரப்போவதாகவும் இடம் தருமாறும் கூறினார் அவர்களை ஜீப்பில் ஏறச்சொன்னேன். டிரக்டர் ஒப்பரேற்றர் பியதாசாவும் தொழிலாளி தசநாயக்காவும், கெக்கராவையில், கலவரம் என்றார்கள். நான் காரிலிருந்த ரேடியோவைத் திருப்பினேன் அப்போது இரவு 8 மணி ரேடியோவில் ஊரடங்கு சட்டம் பற்றி அறிவித்தார்கள். கன்ஸ்டபிள் ரத்னநாயக்கா பயப்படவேண்டாம் நானிருக்கிறேன் என்றார். கெக்கிராவை இன்ஸ்பெக்டரை சந்தித்தேன் ஏதாவது குழப்பமா? என்றார் இல்லை என்றேன் என்னை தன்னுடன் வருமாறு கூறினார்.

### கடைகள் எரிந்தன

நான் என் விடுதிக்குச் சென்றேன் படுத்துவிட்டேன் அதிகாலை 1 மணிக்கு நகரக்கடைகள் எரிந்துகொண்டிருந்தது சோமசுந்தரம் கடை எரிந்தது. அக்கடை பொலிஸ் நிலையத்திலிருந்து 25 யார் தூரத்தில் இருந்தது.

நான் 5-30 மணிக்கு என் மனைவியையும் 9 பிள்ளைகளையும் பார்க்க அனுராதபுரம் புறப்பட்டேன் எனக்கு 3½ ஏக்கர் காணியும் உண்டு ஜீப்பில் சுமதிபாலாவும் வந்தார் அனுராதபுரத்தில் என் வீட்டிலிருந்து கால் மைல் தூரத்தில் பியதாசா ஜீப்பை மறித்தார் அவர் என் அயலவர்

"யாத்தயா வீட்டிலுள்ளவர்கள் காட்டுக்குள் ஓடிவிட்டார்கள் வீடு கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது" என்றார் என்னுடன் வீட்டிற்கு பியதாசாவும் வந்தார் வீட்டில் ஒருவரும் இல்லை கதவுகள் திறந்திருந்தன. 2 நாய்கள் மட்டும் நின்றன.

திருமதி பியதாசா, கண்டபின் பண்டா மனைவி காந்திதசநாயக்கா ஆகியோர் வந்து காலை முதல் என் மனைவியையும் பிள்ளைகளையும் தேடுவதாகவும் அவர்களை காணவில்லை என்றும் கூறினார்கள்.

என் மனைவி ரேடியோவுடனும், மகன் தவக்குட்டனும் சென்றதாக அறிந்தேன்

பின் தலைமைக் கந்தோருக்கு வந்தோம். சுமதிபாலா ஜீப்பில் நகரத்திற்கு போனார் எனக்கு எல்லாரையும் அது தெரியும்.

ஒரு சிறுவன் வந்து என் மனைவியும் பிள்ளைகளும் என்னைத் தேடி கெக்கிராவை சென்றதாக கூறினார்.

மற்றொரு அயலவர் வந்து, என் குடும்பத்தினர் இராணுவ முகாமிற்கு சென்றதாக கூறினார். நான் உடனே ஜீப்பில் ராணுவ முகாமிற்குபோனேன் அங்கு அவர்கள் இல்லை உடனே கெக்கிராவைப் பொலிசுக்குப் போனேன். அங்கும் இல்லை கெக்கிராவைப் பொலிசில் எல்லாத தமிழரும் அனுராதபுரம் முகாமுக்குச் சென்று விட்டதாகவும் அங்கு போய்ப் பார்க்கும்படியும் கூறினார்கள்

பொலிஸ் நிலையத்தில் ஏ எஸ் பி எங்களுக்கு ஒரு லொறி தந்தார். அந்த லொறியில் வேறு தமிழர்களும் ஏறினார்கள்.

மருதங்கடவ வீதியில் இ.போ.ச பஸ் ஒன்று வந்தது. லொறியை நிறுத்தினார்கள் பஸ்ஸிலிருந்து இறங்கிய இளைஞர்கள் கல்லெறிந்தார்கள். இதனால் லொறியில் சிலர் காயமடைந்தனர் சிலர் பஸ்ஸிலிருந்து இறங்கி மீண்டும் இளைஞர்களைப் பஸ்ஸிற்குக் கூட்டிச் சென்றனர்.

பின் கற்குளம் என்ற இடத்தில் யாழ்ப்பாணத்தில் பொலிஸாரைச் சுட்டு அங்கு சடலம் கொண்டுவந்திருப்பதால் பதட்ட நிலை இருப்பதாகவும் அந்தப் பாதையால் செல்ல வேண்டாமென்றும் கூறினார்கள் நாங்கள் லொறியைத் திருப்பி கெக்கிராவைக்குப் போய்த் தலாவைப் பாதையால் சென்றோம் அனுராதபுரத்திற்கு 5 30 மணிக்குப் போனோம். அகதிகள் முகாமிற்குச் சென்றேன். என் உறவினர்கள் இருந்தனர். மனைவி பிள்ளைகளைக் காணவில்லை. பின் இரவு 7 மணிக்கு என் வீட்டிற்குப் போனேன். பக்கத்துக் காடுகளிலும் தேடினேன்.

### சிங்களவர் வீட்டில் பாதுகாப்பு

அப்போது பியதாச வந்து என்னைக் கூட்டி அழைத்து என் மனைவியும் பிள்ளைகளும் அத்தகுளம் பொடிசிங்கா வீட்டில் இருப்பதாகக் கூறினார். பின் நான் அங்கு சென்றேன். பொடிசிங்கா சத்தம் போடவேண்டாமென்று ஒரு அறைக்குள் கூட்டிச் சென்றார். அங்கு அவர்கள் இருந்தனர். பின் நாங்கள் கச்சேரிக்கு வந்தோம். பின்னர் யாழ்ப்பாணம் வந்தோம் என் மனைவியின் சகோதரர் சாவகச்சேரியில் படிப்பிக்கிறார் அவரின் வீட்டில் தங்கினோம் வழியில் எங்கள் பஸ்சுக்கும் கல் வீசப்பட்டது

நான் ஒரு றைபிள் வைத்திருந்தேன். அதைக் காணவில்லை

கமிஷனர்: றைபிள் களவோ?

திருடப்பட்டுவிட்டது.

கமிஷனர்: எப்போது? வீடு கொள்ளையடிக்கப்பட்டபோது

நான் மீண்டும் வீட்டிற்குச் சென்றபோது எனக்கு ஒரு சிங்களக் கடிதம் வந்திருந்தது. தமிழில் விலாசம் எழுதப்பட்டிருந்தது

## குண்டர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்து பணம் தருமாறு கேட்டார்கள்

பணம் என்னிடம் இருக்கிறது அவரை விடுங்கள். என்றேன் என்னை வந்து பிடித்து கத்திமுனையில் கூட்டிச்சென்றனர்.

கீழே இரும்புப்பெட்டியில் பணம் எடுத்துக்கொடுக்க குண்டர்களை கூட்டிச் சென்றேன் அங்கே ஏற்கனவே வேறு குண்டர்கள் இரும்புப்பெட்டியையே கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர் அதனால் பணம் இல்லை என்று அவர்களிடம் கூறினேன் என்னை பயமுறுத்தினார்கள் வெளியில் ஆயிரக்கணக்கான மக்கள் நின்றனர் குண்டர்களும் நின்றனர்.

25 அடி ஆழமான கிணற்றுக்குள் 2 கடை ஊழியரை குண்டர்கள் தூக்கிப் போட்டனர் அவர்கள் தலைமீது பெட்டிகளையும் பரச்சட்டங்களையும் சாக்குகளையும் போட்டனர்

### கிணற்றில் வீசினர்

அனுராதபுர கடை ஊழியர் பிள்ளையினார் கணபதிப்பிள்ளை கந்தசாமி மேலும் கூறியதாவது:

"25 அடி ஆழமான கிணற்றில் 20 அடிக்கு தண்ணீர் இருந்தது என்னையும், மற்றொருவரையும், குண்டர்கள் கிணற்றுக்குள் போட்ட பின்னர் பரக்கட்டைகள், பெட்டிகள், சாக்குகளை எங்கள் மீது போட்டனர் நாங்கள் சுமார் 2 மணிநேரம் கப்பியைப் பிடித்துக்கொண்டு தண்ணீருக்குள் [illegible] நின்று பின் வெளியில் வந்தோம்,

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மாவதி பாலசுப்பிரமணியம்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த திருமதி பத்மாவதி பாலசுப்பிரமணியம் காலமானார். இவர் பாலசுப்பிரமணியத்தின் (சிறுப்பர் சுங்க இலாகா, கொழும்பு) அன்பு மனைவியும், திரு திருமதி இராமுப்பிள்ளை இளையதம்பியின் மகளும், பாலகிருஷ்ணன் (U K), ராதிகா, ராதாகிருஷ்ணன் தேவிகா, பிரபாகிருஷ்ணன் ஜெயகிருஷ்ணன் ஆகியோரின் தாயாரும், புஷ்பராணி (சிவப்பிரகாச வித்தியாசாலை, சண்டிலிப்பாய்), செல்வரஞ்சிதம் (மகா வித்தியாலயம், சண்டிலிப்பாய்), விசாலாட்சி (அச்சுவேலி), புஷ்பரதி [U K], ஜெகதாம்பிகை [பிரதம தாதி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி], சரோஜினிதேவி [மருத்துவமாது கட்டுடை], சாந்தாதேவி (ஆசிரியை, அளவெட்டி) நவசிவி மீனலோஜனி (ஆயுர்வேதக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கந்தசாமி, இராசரத்தினம் (ஆசிரியர் ஸ்கந்த மகாவித்தியாலயம் கிளிநொச்சி), கைலிங்கம் [பொறியியலாளர் [U K], ஐயாக்குட்டி [அச்சுவேலி], அரசரத்தினம் (தினபதி யாழ் நிருபர்) இராசையா உரிமையாளர் சண்டிலிப்பாய் கராஜ், பரமகுரு [அளவெட்டி], பாலசிங்கம் [கிளாஸ்கோ எஸ்டேட்] கணக்கப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் [illegible] சண்டிலிப்பாய் இல்லத்தில் நாளை செவ்வாய்க்கிழமை [14-3 78] காலை 9-00 மணிக்கு நடைபெற்றுத் தகனக்கிரியைக்காக சண்டிலிப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 6742